








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 21.09.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- பொருளாதார நிகழ்வுகள்
- விருதுகள்
- புத்தகங்கள்





We Shine Academy™








## இந்திய நிகழ்வுகள்

- **மேற்கு வங்க** அரசு மனித கடத்தலை **(Human trafficking)** தடுப்பதற்காக மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் **‘ஸ்வயங்சித்தா’ (Swayangsiddha)** என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.

- குறைந்த தொலைவில் நிலத்தில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கவல்ல, நிலத்திலிருந்து ஏவப்படும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஏவுகணையான **‘பிரஹார்’ (Prahar)** ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு **(DRDO) ஒடிசா மாநிலம் சந்திப்பூரில்** வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
    - இந்த ஏவுகணை அனைத்து விதமான காலநிலைகளிலும் இலக்குகளை துல்லியமாக தாக்கும் வல்லன்மை கொண்டதாகும்.

- விமான பயணத்திற்கு காகித ஆவணங்களை சரிபார்த்து அனுமதிக்கும் முறைக்கு மாறாக, **“டிஜி யாத்ரா (Digi Yatra)”** திட்டத்தின் கீழ், விமான நிலையத்தில் பயோமெட்ரிக் முறையும் முகத்தை ஸ்கேன் செய்து அடையாளம் காணும் **Face recognition** முறையுடன் கூடிய **“e-Gate”** என்ற திட்டம் தொடங்க உள்ளது.
    - **இ-கேட் (e-Gate)** என்றழைக்கப்படும் இந்த மின்னணு முறையை பயன்படுத்த, பயணிகள் டிஜியாத்ராவில் ஒருமுறை மட்டும் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

## உலக நிகழ்வுகள்

- **Exercise Aviaindra – 18 - இந்தியா மற்றும் ரஷ்யா** நாடுகளுக்கிடையேயான விமானப் படை நிலை பயிற்சியாகும்.

ஆண்டிற்கு இரண்டு முறை நடத்தப்படும் இவ்விமானப்படை பயிற்சியானது, இந்த ஆண்டு, முதல் பகுதி ரஷ்யாவில் உள்ள **லிபெட்ஸ்க் (Lipetsk)** பகுதியிலுலம், இரண்டாவது பகுதி இந்தியாவின் **ஜோத்பூர் நகரில்** டிசம்பர் 10 முதல் டிசம்பர் 22 வரை நடைபெறவுள்ளது.

- இவ்விமானப்படை பயிற்சியில் இந்தியாவின் போர் விமானங்களான Su-30, Mig-29, Su-25 ஆகியவை பங்கேற்க உள்ளன.

## விளையாட்டு நிகழ்வுகள்

- வங்கதேச தலைநகர் டாக்காவில் நடைபெற்ற **12வது தெற்காசிய கால்பந்து சாம்பியன் ஷிப் போட்டியில்**, நடப்பு சாம்பியனான இந்திய அணியை வீழ்த்தி, **“மாலத்தீவு அணி”** சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

## பொருளாதார நிகழ்வுகள்

- சிறு சேமிப்பு உட்பட பல்வேறு சேமிப்பு திட்டங்களுக்கு வட்டி விகிதம் அதிகப்படுத்தியுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
  - சிறு சேமிப்பு திட்டங்களுக்கான வட்டி விகிதம் அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலாண்டிற்கு சற்று உயர்த்தப்பட்டுள்ளது. 5 ஆண்டுகள் வரையிலான மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டத்திற்கு **8.3 சதவிகிதத்திலிருந்து 8.7** சதவீதமாக வட்டி உயர்த்தப்பட்டுள்ளது.
  - தொழிலாளர் வருங்கால வைப்புநிதி, தேசிய சேமிப்பு பத்திரம் ஆகியவற்றிற்கு வட்டி விகிதம் **7.6 சதவீதத்திலிருந்து 8** சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.
  - பெண்குழந்தைகளுக்கான சுகன்யா சம்ரிதி சேமிப்புத் திட்டத்துக்கான வட்டிவிகிதம் **8.1 சதவீதத்திலிருந்து 8.5** சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.


We Shine Academy™

# விருதுகள்

- மத்திய அரசால் ஆண்டுதோறும் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு வழங்கப்படும் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.
    - **ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருது**, இந்திய கிரிக்கெட் வீரர் **விராட் கோலி** மற்றும் பளுதூக்கல் வீராங்கனை **மீராபாய் சானு** ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
    - **அர்ஜுனா விருதுகள், நீரஜ் சோப்ரா** (ஈட்டி எறிதல்), **ஹீமா தாஸ் (தடகளம்), ஸ்மிருதி மந்தனா** (கிரிக்கெட்), **தமிழக டேபிள் டென்னீஸ் வீரர் சத்யன்** உட்பட 20 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.
    - **துரோணச்சாரியர் விருதுகள், சி.ஏ.குட்டப்பா** (குத்துச்சண்டை), **விஜய் சர்மா** (பளுதூக்கல்), **ஏ.சீனிவாச ராவ்** (டேபிள் டென்னீஸ்), **சுக்தேவ் சிங்** (தடகளம்) ஆகியோருக்கும்,
    - **தயான்சந்த் விருதுகள், பரத் குமார் சேத்ரி** (ஹாக்கி), **பாபி அலோசியஸ்** (தடகளம்), **சவுகலே தாது தத்ராயே** (மல்யுத்தம்) ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- கேரள சுற்றுலாத் துறை தனது புத்தாக்க விளம்பர பிரச்சாரத்துக்கு புகழ்பெற்ற பசுபிக் ஆசிய பயணக் கூட்டமைப்பின் இரண்டு தங்க விருதுகளைப் பெற்றுள்ளது. **(PATA – Pacific Asia Travel Association)**
    - தங்க விருது பெறும் பிரச்சாரம் - **யெல்லா கேரளா** (வளைகுடா நாடுகளில் அச்சு ஊடக பயண பிரச்சாரம்)
    - தங்க விருது பெறும் விளம்பர தட்டிகள் - கொச்சி முசிரியஸ் பையேன்னெலெ (KMB – Kochi Muziris Blennale)

# புத்தகங்கள்

- **வினீத் பாஜ்பாய்** எழுதியுள்ள **‘Harappa trilogy kasha : Secret of the Black temple’** என்ற புத்தகம் புது டெல்லியில்

வெளியிடப்பட்டுள்ளது.

- இவர் வெளியிட்டுள்ள பிற புத்தகங்கள் : ‘Harappa : Curse of the Blood River” and “Pralay The Great Delugu” ஆகியவை ஆகும்.
- ISRO முன்னாள் விஞ்ஞானி **நம்பி நாராயணன்** எழுதிய **“Ready to Fire : How India and I survived the ISRO Spy Case”** என்ற புத்தகத்தை அண்மையில் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy™